# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

### வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி மாணவிகளின் சாதனை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான கபடி போட்டி ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமர குருபரர் கலைக் கல்லூாரியில் ஆகஸ்டு 22 முதல் 24ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் மொத்தம் 27 கல்லூரிகள் பங்குபெற்றது மாணவிகளுக்கான போட்டிகளில் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியின் கபடி அணியினர் தங்கள் முதல் சுற்றில் ஸ்ரீ குமர குருபரர் கல்லூரி அணியினரை 45/9 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றனர். இரண்டாவது சுற்றில் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி அணியினரை 39/27 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். கால் இறுதிப் போட்டியில் நாகர்கோவில் லட்சுமிபுரம் கல்லூரி அணியினருடன் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தனர்.

கால் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த கபடி அணியினர் மற்றும் பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குநர் ஆகியோரை கல்லூரியின் தலைவர், செயலர், துணைச்செயலர், முதல்வர், இயக்குநர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் அனைவரும் பாராட்டினர்.